வாகை பதிப்பகம்

International Research Journal of Tamil Literary Studies

# KOODALILAITHAL A CONVENTIONAL THEME IN BHAKTHI LITERATURE

# பக்தி இலக்கிய அகப்பொருள் மரபில் கூடலிழைத்தல்

**பொன்னி பாஸ்கரன் [அ, *]**

**[அ] தமிழ்த்துறை, ஸ்டாண்டர்டு பட்டாசு இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி - *626123*, தமிழ்நாடு, இந்தியா.**

**Ponni Baskaran [a, *]**

**[a] Department of Tamil, Standard Fireworks Rajaratnam College for Women, Sivakasi- 626123, Tamil Nadu, India.**

**[*] Corresponding Author: ponni-tam@sfrcollege.edu.in**

**Received: 02-04-2021, Accepted: 19-04-2021**

***Abstract:*** During the period of Bhakti Literature, the romantic policies in Sangam Literature got a new structure in which people started to shower their love on God. In Sangam Literature, the lady love longs for the love and the return of her lover from a far off place. This concept of longingness is conventional and is seen in Bhakti Literature too. The longing for the lover's arrival is mentioned briefly in Saiva and Vainava Literatures. In Vainava Literature, the longingness for the love of her man and his arrival is hinted in Andal Pasuram and Thirumangai Azhvar Pasuram. The same theme is hinted in the poetry of Navukkarasar and Nakkeerar in Saiva Literature. Only in the songs of Manickkavasagar, the theme is explained in an elaborate manner.

***Keywords:*** *Koodalilaithal, Andal,Manikkavasagar,Panniru thirumurai,Nalaira Thivya Prabantham*

***ஆய்வுச்சாரம்:*** *பக்தி இலக்கிய அகப்பொருள் மரபில் கூடலிழைத்தல் என்ற இவ்வாய்வின் முதன்மை நோக்கம் சங்கஇலக்கியங்களில் காணப்பட்ட அகத்திணைக் கொள்கைகள் பக்தி இலக்கிய காலத்தில் புதிய வடிவம் கொண்டு இறைவன் மீதான காதலாக எவ்வகையில் மாற்றம் பெற்றன என்பதனை ஆராய்வதாகும். இவ்வாய்வில் பகுப்பாய்வு மற்றும் விளக்கமுறை அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியத் தலைவி பிாிந்து சென்ற தலைவனின் வருகையை எண்ணி கூடலிழைக்கும் மரபு பக்தி இலக்கியத்திலும் காணப்படுகின்றது. சைவ,வைணவ இலக்கியங்களில் கூடலிழைத்தல் பற்றிய குறிப்புகள் உள்ளன. வைணவத்தில் ஆண்டாள் பாசுரங்களிலும், திருமங்கையாழ்வார் பாசுரங்களிலும் கூடலிழைத்தல் பற்றிய குறிப்புகள் மட்டுமே அமைந்துள்ளன. சைவ இலக்கியங்களிலும் நாவுக்கரசர்,நக்கீரர் பாடல்களில் கூடலிழைத்தல் குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன.மாணிக்கவாசகரது பாடலில் மட்டுமே கூடலிழைத்தல் குறித்த சற்று விாிவான விளக்கத்தினைக் காணமுடிகிறது என்பதனை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.*

***கருச்சொற்கள்:*** *கூடலிழைத்தல், ஆண்டாள், மாணிக்கவாசகர், பன்னிரு திருமுறை, நாலாயிரதிவ்யப்பிரபந்தம்*

## *அறிமுகம்:*

*தமிழகத்தில் சங்ககாலத்திற்குப் பின்னர் நிலையான தமிழ் மன்னராட்சி தோன்றவில்லை.வெவ்வேறு மொழியினர் மற்றும் இனத்தவரே தமிழகத்தை ஆண்டனர். ஆகவே ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மக்களுக்கு சமயம் மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. சமணர்கள், பௌத்தர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. அவர்களது இலக்கியங்கள் காதலையும், போரினையும் வெறுத்து ஒதுங்கின. மேலும் அவர்கள் இசையும் கூத்தும் காமத்தை வளர்க்கும் என்று கூறி அவற்றை வெறுக்கும் படி அறிவுறுத்தினர். இந்நிலையில் உணர்ச்சியைக் கட்டுப்படுத்து என்ற அவர்களது இலக்கியங்களுக்கு மாற்று வழியாக உணர்ச்சியை இறைவன் மேல் செலுத்து என்ற வகையில் சைவர்களும் வைணவர்களும் இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினர். அப்பக்தி இலக்கியக் கொள்கைகளுள் ஒன்றே அகத்திணை மரபு. சங்ககால அகத்திணை மரபில் அமைந்துள்ள கூடலிழைத்தல், பக்தி இலக்கியங்களிலும் காணப்படுகிறது.*

## *ஆய்வு முன்னோடிகள்*

*தமிழ் இலக்கியங்களில் கூடலிழைத்தல் குறித்து முனைவர் க.காந்தி அவர்கள் தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் என்ற நூலில் ஆழியிழைத்தல் என்ற தலைப்பில் கீழ் ஆராய்ந்து கருத்துகளை வெளியிட்டுள்ளார்.*

*டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்களும் கூடலிழைத்தல் குறித்து அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூலில் தலைவியின் உளநிலையை அறிவதில் கூடலிழைத்தலுக்கு இருக்கும் பங்கினை ஆராய்ந்துள்ளார்.*

## *ஆய்வு நெறிமுறைகள்*

*இவ்வாய்வு பகுப்பாய்வு மற்றும் விளக்கமுறை அணுகுமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குத் தேவையாக தரவுகள் நூல்கள் மற்றும் அகராதிகளில் இருந்து பெறப்பட்டுள்ளன. மேலும் ஆய்வாளர் பன்னிரு ஆழ்வார்களின் பக்திநிலை என்றும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டவர் ஆகையால் பக்தி இலக்கியங்களில் தரவுகள் விளக்கமாக சேகரிக்கப்பட்டுள்ளன என்பதனை அறிந்து கொள்ளலாம்.*

## *கூடலிழைத்தல் :*

*கூடலிழைத்தல், கூடல், ஆழி, ஆழியிழைத்தல் எனவும் சுட்டப்படும். தமிழ்ப்பேரகராதி, "தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தமறியத் தரையில் சுழிக்கும் சுழிக்குறி" ( தமிழ் லெக்ஸிகன், தொகுதி2, ப.1068 )எனக் கூடலிழைத்தலுக்குப் பொருள் சுட்டுகிறது.*

*தலைவி,தலைவனின் பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் நிலையில் அவன் எப்போது வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பாள்.அதனை அறிந்து கொள்ளத் தன் அளவில் குறிபார்ப்பாள். களவுக்காலமாதலால் பிறரிடம் குறி பார்த்தால் அஃது அவளின் களவினைத் தானே வெளிப்படுத்துவதாக அமையும். அஃது ஏற்புடையதன்று. தோழியிடம் கேட்பாளாயின் அவள் தலைவியினுடைய எண்ணத்திற்கு ஏற்பவே கூறுவாள். அதுவும் அவளுக்கு மனநிறைவைத் தராது. "இந்நிலையில் தலைவி தானே அக்குறியினைப் பார்க்க எண்ணித் தான் தன் தோழியோடு விளையாடும் இடம் நோக்கிச் செல்வாள். அங்கு ஒருபுறம் மணலாக உள்ள இடத்தை மேடு பள்ளமின்றி நேராகப் பரப்புவாள். அம்மணற்பரப்பின் மீது தான் அமர்ந்து தன்னைச் சுற்றியொரு கோடு கிழித்து, முதலில் ஒரு பெரிய வட்டம் அமைப்பாள். அதன் பிறகு அவள் தன் கண்ணைக் கட்டிக் கொண்டு, தனக்கு எதிரிலுள்ள அப்பெரிய வட்டக் கோட்டில் ஓரிடத்தைக் குறியிடமாக வைத்து அங்கிருந்து தொடங்கி அவ்வட்டக் கோட்டின் மேலேயே அக்கோடு முழுமையும் சிறுசிறு வட்டங்களாக ஒன்றையொன்று தொடுமாறும், முதலில் தொடங்கிய குறியிடத்தில் வந்து முடியுமாறும் கோடு சுழித்துக் கொண்டே வருவாள். தொடங்கிய இடத்தில் அச்சிறு வட்டத் தொடர் வந்து கூடாமல் பிறழ்ந்து விட்டால் எப்படியாயினும் இது தலைக் கூடுமாறு மீண்டும் திருத்தித் திருத்திச் செய்வாள். இங்ஙனமாக முதலும் கடையுமாகக் கூடுமாறு*

*செய்தலைத்தான் கூடல் இழைத்தல் என்று அகப்பொருள் நூல்கள் சுட்டும். இக்கூடல் இழைத்த பிறகு தலைவி தன் கண்களைத் திறந்து பார்த்து அப்பெரு வட்டக்கோட்டின் மேலுள்ள சிறிய சுழிகளை எண்ணிப் பார்ப்பாள். அச்சுழிகள் இரட்டைப்படையாய் வந்தால், தலைவன் அன்று வருவான் என்பதும் ஒற்றைப் படையில் வரின் அவன் அன்று வாரான் என்பதும் அவள் கொள்ளும் நம்பிக்கை. அதற்காக முதலில் எண்ணும் போது சுழிகள் ஒற்றைப்படையாக வந்து விட்டால் தலைவி தான் கணக்கிட்டது தான் ஒருகால் தவறாயிற்றோ? என்று மீண்டும் மீண்டும்எண்ணிக் கணக்கிடுவாள். இரண்டு, மூன்று முறை எண்ணிப் பார்த்தும் அவ்வொற்றைப்படை எண்ணே வருமாயின் அவள் நெஞ்சம் நைந்து வருந்துவாள்" ( டாக்டர்.ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள்,ப.179 ) என்று குறிப்பிடுவர்.*

*இக்கூடலிழைத்தல் முறையை சங்க இலக்கியத்தில் காணலாகின்றது. தலைவனைப் பிரிந்து வாடும் சங்க இலக்கியக் கலித்தொகைத் தலைவி கூடல் இழைக்கின்றாள். ஒரு முனை மறு முனையுடன் கூடவில்லை. ஆதலால் அஃது இளம்பிறை போல் தோன்றுகிறது. அந்த இளம்பிறை பின்பு முழுநிலவாக மாறி வருத்தும் என்று எண்ணுகிறாள். உடனே தான் உடுத்தியிருந்த ஆடையால் அதனை மூடுகிறாள். பின்னர் இளம்பிறையை அணியும் சிவபெருமான் பிறையைத் தேடுவான் என்று எண்ணுகிறாள். தான் சிவனுக்கு அதனைக் கொடுத்து உதவ வேண்டும் என்று எண்ணி அதனை மூடும் முயற்சியைக் கைவிடுகிறாள்.இதனை,*

*கோடு வாய் கூடாப் பிறையை பிறிது ஒன்று*

*நாடுவேன் கண்டனென் சிற்றிலுள் கண்டு ஆங்கே*

*ஆடையான் மூஉய் அகப்படுப்பேன் சூடிய*

*காணான் திரிதரும்கொல்லோ மணிமிடற்று*

*மாண் மலர்க் கொன்றையவன்? ( நெய்தற் கலி,பா- 25 : 24-28 )*

*என்ற பாடலடிகளால் அறியலாம். இப்பாடல் அடிகளில் கோடுவாய்பிறை என்ற குறிப்பினை மட்டுமே காணமுடிகிறதே தவிர கூடல் இழைக்கும் முறையினைக் காணவில்லை.*

## *நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் கூடலிழைத்தல்:*

*பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் நாயகன் நாயகி பாவனையில் அமைந்த பாசுரங்களில் கூடல் இழைத்தல் குறித்துக் காணலாகின்றது. திருமழிசையாழ்வார்,*

*அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண*

*இழைப்பன் திருக்கூடல் கூட மழைப்பே*

*ரருவி மணிவரன்றி வந்திழிய யானை*

*வெருவி யரவொடுங்கும் வெற்பு ( நான்முகன் திருவந்தாதி,பா – 39 )*

*என்ற பாசுரத்தில் நாயகி பாவனையில் கூடல் இழைப்பதாகக் குறிப்பிடுகிறார். நாச்சியார் திருமொழியில் கூடல் இழைத்தல் குறித்து ஒரு பதிகமே காணப்படுகின்றது.*

*ஒட்டா ராவந்தென் கைப்பற்றித் தன்னொடும்*

*கூட்டு மாகில்நீ கூடிடு கூடலே ( நாச்சியார் திருமொழி,பா -4:2:3-4 )*

*என்ற பாசுர அடிகளில் ஆண்டாள் திருமாலோடு இணைய வேண்டும் என்று எண்ணிக் கூடலிழைப்பதைக் காணலாம். ஏனைய பாசுரங்களில் இறைவன் வருவான் என்றால் கூடலே கூடி விடு என்று கூறிச் செல்கின்றாள்.*

*மாம கன்மிகு சீர்வசு தேவர்தம்*

*கோ மகன்வரில் கூடிடு கூடலே ( நாச்சியார் திருமொழி,பா-4:3:3-4 )*

*என்ற பாசுர அடிகளும்,*

*அழக னாரணி யாய்ச்சியர் சிந்தையுள்*

*குழக னார்வரில் கூடிடு கூடலே* *( நாச்சியார் திருமொழி,பா-4:10:3-4 )*

*என்ற பாசுர அடிகளும் இதனை விளக்குகின்றன. இப்பாசுரங்களில் கூடலே கூடி விடு என்ற வேண்டுகோளை மட்டுமே கேட்க முடிகிறது. கூடல் இழைக்கும் முறை பற்றிய குறிப்புகளைக் காணஇயலவில்லை.*

### *பன்னிருதிருமுறைகளில் கூடலிழைத்தல்:*

*பன்னிரு திருமுறைகளிலும் அகப்பொருள் மரபில் அமைந்த கூடலிழைத்தல் குறித்த பாடல்களைக் காணமுடிகிறது.*

### *நாவுக்கரசர் தேவாரம் :*

*திருநாவுக்கரசர் தன்னுடைய தேவாரத்தில் கூடல் இழைத்தல் குறித்துக் குறிப்பிடுகின்றார்.*

*வஞ்சித்து வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்*

*பஞ்சிற்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்*

*அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி*

*குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே* *( 4ஆம்திருமுறை,பா – 112 -10 )*

*இப்பாடலில் கோடியையே என்பது கோடு இயையே என்பதாகும். இதற்கு உரையாசிரியர்கள் விளக்கம் தரும் போது "கோடியையே-கோடு இயையே அகத்துறையில் தலைவன் வருவானோ என எண்ணிக் கண்களை மூடிக்கொண்டு தலைவியானவள் இரண்டு கோடுகளைக் கிழிக்க அவை இயையும் தன்மையில் தலைவன் வருவான் எனும் குறிப்புக் கொண்டு மகிழ்வாள்" (வ.த.இராமசுப்பிரமணியம்( உ.ஆ.), பன்னிருதிருமுறைகள் மூலமும் உரையும், தொகுதி7, ப.153) என்று குறிப்பிடுகின்றனர். தலைவனை நினைத்து ஏங்கும் தலைவியின் மனநிலையில் நாவுக்கரசர் இப்பாடலைப் பாடியுள்ளார். மற்றொரு பாடலில்,*

*பாடலாக் கிடும் பண்ணொடு பெண்ணிவள்*

*கூட லாக்கிடும் குன்றின் மணற்கொடு*

*கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்து*

*ஆடும் கூத்தனுக்கு அன்புபட் டாள்அன்றே* *( 5ஆம்திருமுறை,பா – 64-4 )*

*என்று தலைவி கூடல் இழைப்பதைக் குறிப்படுகிறார். மேலும் அதே ஐந்தாம் திருமுறையில்,*

*நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர் மல்கும்*

*ஓடு மாலினோ டொண்ணொடி மாதராள்*

*மாட நீள்மரு கற்பெருமான்வரில்*

*கூடுநீ என்று கூடலிழைக்குமே* *( 5ஆம்திருமுறை,பா – 88-8 )*

*என்ற பாடலிலும் தலைவி மனநிலையில் கூடலிழைப்பதாகக் குறிப்பிடுகிறார். நாவுக்கரசரின் இம்மூன்று பாடல்களிலும் முதல் பாடல் தலைவி,தலைவன் இதுவரை வரவில்லை தலைவன் வர நீ கூடு என்று கூறுவதாகவும், இரண்டாம் பாடல் தலைவி கூடல் இழைப்பதாகவும், மூன்றாம் பாடல் தலைவன் வருவானேல் நீ கூடு என்று கூறுவதாகவும் அமைந்துள்ளன. இப்பாடல்களிலும் கூடலிழைத்தல் பற்றிய குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன.*

### *கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதி :*

*நக்கீரரது கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதியிலும் தலைவி கூடல் இழைக்கும் தன்மையைக் காணமுடிகிறது.*

*இசையும்தன் கோலத்தை யான்காண வேண்டி*

*வசையில்சீர்க் காளத்தி மன்னன் - அசைவின்றிக்*

*காட்டுமேல் காட்டிக் கலந்தென்னைத் தன்னோடும்*

*கூட்டுமேல் கூடலே கூடு ( கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி – பா.391 )*

*என்ற பாடலில் காளத்திநாதன் தன்னோடு கூடுமேல் கூடலே கூடு என்று தலைவி குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.*

### *திருக்கோவையார்:*

*அகஇலக்கியத்தை வரிசைமுறையாகக் கொண்டு பக்தி இலக்கியத்தில் முதன் முதலில் அகப்பாடல்களைப் பாடியவர் மாணிக்கவாசகர் ஆவார். அவருடைய திருக்கோவையார் அகப்பொருள் துறைகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டது. இது சிற்றம்பலத்தைப் பாடல்தோறும் போற்றுவதால் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பெயர் பெற்றது. திருக்கோவையாரில்,*

*ஆழி திருத்தும் புலியூ ருடையான் அருளின் அளித்து*

*ஆழி திருத்தும் மணற்குன்றின் நீத்து அகன்றார் வருக என்று*

*ஆழி திருத்திச் சுழிக்கணக்கு ஓதி நையாமல்ஐய*

*ஆழி திருத்தித் தாக்கிற்றி யோஉள்ளம் வள்ளலையே ( திருக்கோவையார், பா.186 )*

*என்ற பாடலே கூடலிழைக்கும் முறையை சற்று விரிவாகக் குறிப்பிடுகின்றது. தலைவி மணற்குன்றை அடைந்து தலைவனை தன் உள்ளத்தில் நினைத்து தலைவனை எனக்குத் தரமாட்டாயோ என்று சுழிகளை இட்டு கூடல் தெய்வத்தை வாழ்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

### *முடிவுரை*

*இறைவன் மீது செலுத்தப்படுகின்ற எந்த வகையான உணர்வாக இருந்தாலும், அஃது இறைவனை அடைய கைக்கொள்ளும் குறிக்கோளாகவே கொள்ளப்படும். அவ்வகையில் காமமும் இறைவனை அடைய உதவும் வழிகளில் ஒன்றாகவே அமைகிறது. ஆகவே சமயச்சான்றோர்கள் இறைவன் மீது பாடிய பாடல்களை காதல் உணர்வு மேலிடப் பாடியுள்ளனர். அகவுணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்த அப்பாடல்களில் அகஇலக்கியக் கொள்கைகளுள் ஒன்றான கூடலிழைத்தல் குறித்துக் காணப்படுகின்றது. அப்பாடல்களில் மாணிக்கவாசகர் பாடலில் மட்டும் தான் கூடலிழைக்கும் முறை பற்றிய குறிப்புகளைக் காணமுடிகிறது.மற்றையோர் பாடல்களில் கூடலே கூடிவிடு என்ற எதிர்பார்ப்பினை மட்டுமே காணமுடிகிறதே தவிர கூடலிழைக்கும் முறைமையைக் குறித்துக் காணஇயலவில்லை.*

### *REFERENCES*

Tamil lexicon, (1982) University of Madras,Madras, India.

Subburettiyar, N., (1981), Akattinai kolkaikal, Novel Art Printers, 137, Jani Jan Khan Road, Madras, India.

Ramasuppiramaniyam, V.T., (2002), Thirunavukarasar Devaram (MoolamumThelivurayum), Varthamanan Pathippagam, Chennai, India

Gandi, K., (2003), Tamilar Palakkavalakkangalum Nampikkaikalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Ponni, B., (2011), Azhvaargalin Aaraamutham,Thirukkural Pathippagam, Chennai, India.

Kailasapathi, K., (1996), Pandai Thamilar valvum valipadum, Pari Nilayam, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License

வாகை பதிப்பகம்